தென்னைக்கு கூடுதல் நிவாரணத் தொகை: முதல்வர் பரிசீலிப்பார்

அமைச்சர் செங்கோட்டையன்

தஞ்சாவூரில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் செங்கோட்டையன்.

தஞ்சாவூர், நவ. 21: தென்னை கூடுதல் நிவாரணத் தொகை வழங்க வேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கையை முதல்வர் பரிசீலனை செய்வார் என்றார் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன்.

தஞ்சாவூரில் செய்தியாளர்களிடம் புதன்கிழமை அவர் கூறியதாவது:

இந்தப் புயலால் வரலாறு காணாத சேதம் ஏற்பட்டுள்ளது. இதுபோன்ற சேதத்தை எனது வாழ்நாளில் பார்த்ததில்லை.

தஞ்சை மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் விழுந்து கிடக்கும் மரங்களை அப்புறப்படுத்துவதற்காக 250-க்கும் அதிகமான மரம் அறுக்கும் இயந்திரங்கள், 150-க்கும் மேற்பட்ட ஜெனரேட்டர்கள், 50-க்கும் மேற்பட்ட டீசல் என்ஜின்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. மாவட்டத்தில் புயலால் 22,700 மின் கம்பங்கள் சாய்ந்துள்ளன. இவற்றை சீர் செய்யும் பணியில் 4,000 பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். இப்பணி விரைவில் முடிவடையும்.

மேலும், பாதிப்பு குறித்து வருவாய்த் துறையினர், ஊரக வளர்ச்சித் துறையினர், கால்நடை பராமரிப்புத் துறையினர், வேளாண் துறையினர் ஆகியோர் கணக்கெடுத்து வருகின்றனர்.

குடிசைகள் சேதம் குறித்த கணக்கெடுப்புப் பணியும், சாலைகளில் விழுந்த மரங்களை அகற்றும் பணியும் இரு நாட்களில் முடிந்துவிடும். மரங்களை அகற்ற 40 குழுவினர் செயல்படுகின்றனர். மாவட்டத்தில் 54 நிவாரண முகாம்களில் 10,925 பேர் தங்கியுள்ளனர்.

பட்டுக்கோட்டைக்கு வந்த முதல்வரிடம் தென்னைக்கு அறிவிக்கப்பட்ட நிவாரணத் தொகை போதுமானதல்ல என தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலப் பொதுச் செயலர் துரைமாணிக்கம் கூறினார். இதே கோரிக்கையை மேலும் சில விவசாய சங்க நிர்வாகிகளும் கூறினர். எனவே இதுதொடர்பாக முதல்வர் ஆலோசித்து வருகிறார்.

3 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள்: மாவட்டத்தில் நிவாரணப் பணிகள் மற்றும் சீரமைப்புப் பணிகளை ஒருங்கிணைத்து மேற்பார்வை செய்ய 3 கண்காணிப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒரத்தநாடு வட்டத்தில் விஜய ராஜ்குமார், பட்டுக்கோட்டை வட்டத்தில் தரேஷ் அகமது, பேராவூரணி வட்டத்தில் மேக்நாத் ரெட்டி மேற்பார்வை செய்து வருகின்றனர்.

பள்ளிகள் இன்று திறப்பு: பள்ளிகளில் விழுந்த மரங்களை அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, வியாழக்கிழமை (நவ.22) முதல் பள்ளிகள் திறக்கப்படும். மேலும், புதிய புத்தகங்களும் தயார் நிலையில் உள்ளதால், அவையும் வியாழக்கிழமை வழங்கப்படும் என்றார் செங்கோட்டையன்.

வேளாண் துறை அமைச்சர் இரா. துரைக்கண்ணு, கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் உடுமலை கே. ராதாகிருஷ்ணன், செய்தி - விளம்பரத் துறை அமைச்சர் கடம்பூர் ராஜு, மாநிலங்களவை உறுப்பினர் ஆர். வைத்திலிங்கம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

'8 ஆயிரம் ஹெக்டேரில் வாழை நாசம்'

திருச்சி, நவ. 21: கஜா புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் 8 ஆயிரம் ஹெக்டேரில் வாழை நாசமடைந்திருப்பதை மதிப்பிட்டுள்ளதாக தேசிய வாழை ஆராய்ச்சி மைய இயக்குநர் எஸ். உமா தெரிவித்தார். இதுதொடர்பாக, அவர் புதன்கிழமை வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பது:

திருவாரூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருச்சி, கரூர், திண்டுக்கல், சிவகங்கை, தேனி உள்ளிட்ட மாவட்டங்களில் பிரதான பயிராகவும், ஊடு பயிராகவும் பயிரிடப்பட்டிருந்த வாழைகள் முழுவதும் கஜா புயலால் கடுமையாக சேதமடைந்துள்ளன. இந்தப் பகுதிகளில் 8 ஆயிரம் ஹெக்டேரில் பயிரிடப்பட்ட வாழைகள் அழிவை சந்தித்துள்ளன. குறிப்பாக, பொங்கல் பண்டிக்கைகாக பயிரியிடப்பட்டிருந்த வாழைகளில் ரூ.500 கோடி மதிப்பிலான வாழைகள் சேதமடைந்துள்ளன. 100 மற்றும் 110 கி.மீ. வேகத்தில் வீசிய காற்றின் காரணமாக வாழைகள் தண்டுப்பகுதியாகவும், முழுமையாகவும், பாதியளவும் என காற்றின் வேகத்துக்கு தகுந்தபடி ஒடிந்து விழுந்துள்ளன.

காவிரி டெல்டா மாவட்டங்களில் மட்டும் பயிரிடப்படும் அரிய வகை வாழை ரகங்கள், பாரம்பரிய வாழை ரகங்களும் தப்பவில்லை. பாதிக்கப்பட்ட வாழை விவசாயிகளுக்கு உதவிடும் வகையில் தேசிய வாழை ஆராய்ச்சி மையத்தின் விஞ்ஞானிகள் சேத பகுதிகளை பார்வையிட்டு சேத விவரங்களை மதிப்பிட்டு வருகின்றனர். அதுமட்டுமல்லாது சேதமடைந்த பயிர்களில் காப்பாற்றக் கூடிய நிலையில் உள்ள வாழைகளை மீண்டும் உயிர்ப்பிக்க தேவையான ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட வாழை விவசாயிகள் அனைவரும் நிவாரணத்தை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். அவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்க தமிழக அரசுடன் தொடர்பில் இருந்து வருகிறோம். மேலும், வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை மூலம் இணைந்து பாதிக்கப்பட்ட பகுதிகளில் சேத விவரங்களை துல்லியமாக கணக்கிடப்படுகிறது. தன்னார்வலர்கள், சேவை அமைப்புகளின் உதவிகளை பெற்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கும் பணியிலும் தேசிய வாழை ஆராய்ச்சி மையம் ஈடுபட்டுள்ளது என்றார்.

pnb Housing
Finance Limited

பதிவு அலுவலகம் : 9 வது தளம், அன்ட்ரிக்ஷ் பவன், 22, K.G. மார்க், புதுடெல்லி-110001.
தொலைபேசி எண்கள் : 011-23357171, 23357172, 23705414 வலைதளம் : www.pnbhousing.com
கிளை அலுவலகம் : 1112, ராஜா ப்ளாஸா, II வது தளம், அவினாசி சாலை, லட்சுமி மில்ஸ் அருகில், கோயமுத்தூர்-641037
தொலைபேசி : 0422-2240677 மின்னஞ்சல் : coimbatore@pnbhousing.com

பொது அறிவிப்பு - அசையாச்சொத்து(க்கள்) மின்னணு ஏலம் மற்றும் விற்பனை (IES)

விதி 8(6) க்கான விதி விலக்கு மற்றும் பிற்சேர்க்கை – IV-A ன் படி அசையாச்சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு
(நாளது தேதியில் திருத்தியமைக்கப்பட்ட பிணைச்சொத்து பாதுகாப்பு மற்றும் நிதிச்சொத்து மறுசீரமைப்பு & பிணைச்சொத்து பாதுகாப்பு அமலாக்கம் சட்டம் 2002 ன் கீழ்)

இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுவது யாதெனில், "பிஎன்பி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிட்டெட்" ("PNBHFL") என்பது நிறுவனங்கள் சட்டம் 1956 மற்றும் தேசிய வீட்டுக்கடன் வங்கி சட்டம் 1987 ன் பிரிவு 29-A ன் கீழ் பதிவு செய்யப்பட்ட, பஞ்சாப் நேஷனல் வங்கியின் துணை நிறுவனமாக செயல்படும் ஒரு (HFC) வீட்டு வசதிக்கான நிதி நிறுவனமாகும். இப்பவும், இதன் கீழ்க்கையொப்பமிட்ட நபர், பிஎன்பி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிட்டெட் - ன், பிணைச்சொத்து பாதுகாப்பு மற்றும் நிதிச்சொத்து மறுசீரமைப்பு & பிணைச்சொத்து பாதுகாப்பு அமலாக்கம் சட்டம் 2002 ன் கீழான அதிகாரப்பூர்வ அலுவலராகவும், மேற்சொன்ன சட்டம் பிரிவு 13(12) உடன் படிக்க 'பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 9 ன் கீழான அதிகாரத்தை செயலுறுத்தியும், ஒவ்வொரு கணக்குக்கும் எதிராக குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் கோரிக்கை அறிவிப்பு/களை வழங்கி, அந்தந்த கடன்தாரர்/களை அழைத்து மேற்சொன்ன அறிவிப்பு(களை) பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச்செலுத்தக்கோரினார்.

கடன்தாரர்/கள் அத்தொகையை திருப்பிச் செலுத்த தவறியமையால், இந்த அறிவிப்பு மூலம் கடன்தாரர்/கள் மற்றும் பொதுமக்களுக்கு தெரிவிப்பது யாதெனில், கீழ்க்கையொப்பமிட்ட நபர், ஜாமீன் பெற்ற கடனளித்தவருக்கு அடமானம் செய்யப்பட்ட / கடன் பொறுப்புக்கு உட்படுத்தப்பட்ட, இதன் கீழ்க்குறிப்பிட்டுள்ள அசையாச்சொத்து / க்களை மேற்சொன்ன 'சட்டத்தின் பிரிவு 13(4) மேற்சொன்ன விதிகளில் விதி 8 & 9 உடன் படிக்க' வின் படி, ஒவ்வொரு கணக்குக்கும் எதிராக குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் இயற்சுவாதீனம் / ஆக்கபூர்வ சுவாதீனம் எடுத்துள்ளார். இப்பவும், கீழ்க்கையொப்பமிட்ட நபரால், அசையாச்சொத்துக்களை "இருக்கின்ற இடத்தில்" மற்றும் "இருக்கின்ற நிலையில்" என்ற அடிப்படையில் இதன் கீழ்க்குறிப்பிட்ட சுருக்கமான விபரங்களின் படி மூடி முத்திரையிட்ட உறையிலிட்ட விலைப்புள்ளிகள், பொது ஏலம் (மின்னணு ஏலம் உட்பட) மூலம் விற்பதற்காக வரவேற்கப்படுகின்றன. இச்சொத்துக்கள், PNBHFL உடனான கடன் கணக்குகளுக்கு ஜாமீனாக கொடுக்கப்பட்டவையாகும். இச்சொத்துக்கள், இதன் கீழ்க்குறிப்பிட்ட அந்தந்த கடன்தாரர்களின் கடன் கணக்கு(களுக்கு) எதிராக அடமானம் வைக்கப்பட்டு பெற்ற கடனுக்கான நிலுவைத்தொகைகளை வசூலிப்பதற்காக விற்பனை செய்யப்படவுள்ளன.

வ. எண்.	கடன் கணக்கு எண். (A)	கடன்தாரர் / கூட்டு - கடன்தாரர் / ஜாமீன்தாரர்(கள்) பெயர் (B)	கோரப்பட்ட தொகை & தேதி (C)	சுவாதீன தன்மை (D)	அடமான சொத்துக்களின் விபரம் (E)	அடிப்படை விலை (F)	டேவணித் தொகை (RP) (G)	ஆய்வு தேதி & நேரம் (H)	ஏல தேதி & நேரம் (I)	தெரிந்த வில்லங்கங்கள் (ஏதேனும் இருப்பின்) (J)
1	HOU/COI/1115/250976	திரு.பிரபாகரன்.A., திருமதி.ஜானகி.P	10.09.2016 ரூ.19,55,016.05/- (ரூபாய். பத்தொன்பது இலட்சத்து ஐம்பத்து ஐந்தாயிரத்து பதினாறு மற்றும் பைசா ஐந்து மட்டும்)	இயற் சுவாதீனம்	திருப்பூர் பதிவு மாவட்டம், பல்லடம் சார் பதிவு மாவட்டம், பல்லடம் தாலுக்கா, பொங்கலூர் பஞ்சாயத்து, மாதப்பூர் கிராமம், சர்வே எண். 151/1 ல் உள்ள புஞ்சை ஏக்கர் 9.15., "சேரன் நகர் விரிவு II" என்ற பெயரில் வீட்டுமனைகளாக பிரிக்கப்பட்ட லே-அவுட்டில் உள்ள சைட் எண். 157 பின்வரும் எல்லைகளுக்கு மத்தியில் உள்ளது. எல்லைகள் : வடக்கு - சர்வே எண்.151/1 க்கு சொந்தமான இடம், தெற்கு - சைட் எண். 156, கிழக்கு - 30 அடி தென்வடல் லே-அவுட் சாலை, மேற்கு - சைட் எண். 142 இவைகளுக்கு மத்தியில் உள்ள. அளவீடுகள் : கிழமேல் இருபுறம் - 50 அடி, தென்வடல் கிழபுறம் - 32 அடி, தென்வடல் மேற்கு புறம் - 34-1/2 அடி., ஆக மொத்தம் 1656-1/4 ச.அடி பரப்பளவு கொண்ட இடம் மற்றும் அதில் கட்டப்பட்ட ஆர் சி சி கட்டிடம், மற்றும் லே-அவுட் சாலைகள் மற்றும் பொது வசதிகளை பயன்படுத்தும் உரிமை ஆகியவற்றுடன் கூடியது.	13,85,100/-	ரூ.1,38,510/-	05.12.2018 காலை 10.00	11.12.2018 மதியம் 02.00 மணி முதல் 04.00 வரை	இல்லை
2	HOU/COI/0415/217662 & HOU/COI/0415/218069	1.திரு.லட்சுமி குமார்.S, 2. திருமதி.தேவி ராஜசேகரன்	06.09.2016 ரூ.38,21,190.04/- (ரூபாய். முப்பத்து எட்டு இலட்சத்து இருபத்து ஓராயிரத்து நூற்று தொண்ணூறு மற்றும் பைசா நான்கு மட்டும்) & ரூ. 9,84,349.22/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து எண்பத்தி நான்காயிரத்து முன்னூற்று நாற்பத்தொன்பது மற்றும் பைசா இருபத்து இரண்டு மட்டும்)	இயற் சுவாதீனம்	பட்டியல் - A கோயமுத்தூர் மாவட்டம், கோயமுத்தூர் தாலுக்கா, உப்பிலி பாளையம் கிராமம், G.V. ரெசிடென்ஸி ல் அமையப்பெற்றுள்ள, கோயமுத்தூர் (தெற்கு) வட்டாட்சியர் அவர்களால் சர்வே செய்யப்பட்டு, 27-02-2006 தேதியிட்டு ஆணையால் வழங்கப்பட்ட பட்டா எண்.781 ன் படி உள்ள 4.45 ஏக்கர் காலி இடம்., அதாவது சர்வே எண்.147/1B ல் 2.57 ஏக்கர், சர்வே எண்.153/1B,2B,3B மற்றும் 48 ல் உள்ள 1.93 ஏக்கரில் உள்ள 1.85 ஏக்கர், மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் மற்றும் அனைத்து வசதிகள் முழுவதும். இது, பட்டியல் "A" பகுதியாக உள்ளது. பட்டியல் - B கோயமுத்தூர் மாவட்டம், கோயமுத்தூர் தாலுக்கா, உப்பிலி பாளையம் கிராமம், G.V. ரெசிடென்ஸி, ஷக்தி டவர்ஸ் - ல் அமையப்பெற்றுள்ள, கோயமுத்தூர் (தெற்கு) வட்டாட்சியர் அவர்களால் சர்வே செய்யப்பட்டு, 27-02-2006 தேதியிட்டு ஆணையால் வழங்கப்பட்ட பட்டா எண்.781 ன் படி உள்ள, சர்வே எண்.148/2 பகுதியில் உள்ள 3.19 ஏக்கரில் உள்ள 2.603 ஏக்கர், மற்றும் சர்வே எண்.148/2 ல் உள்ள 29 செண்ட் (12,640 சதுர அடி) நீங்கலாக, சர்வே எண்.148/2 பகுதியில் உள்ள 2646 ச.அடி., இவை 08-02-2007 தேதியிட்டு ஆணையாளர், கோயமுத்தூர் மாநகர நகராட்சி கவுன்சில் பெயருக்கு பொது சாலைக்காக தானம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், திறந்தவெளி ஒதுக்கீடு ஒழுங்குமுறையின் படி, 27-02-2006 தேதியிட்டு ஆணையாளர், கோயமுத்தூர் மாநகர நகராட்சி கவுன்சில் பெயருக்கு தானம் வழங்கப்பட்டுள்ளது. வளர்ச்சிக்காக உள்ள இவைகள் மற்றும் இவற்றுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் மற்றும் அனைத்து வசதிகள் முழுவதும். எல்லைகள் : வடக்கு - சர்வே எண்.147/1A, தெற்கு - சர்வே எண்.154, மேற்கு - O S R - க்கு தானம் வழங்கப்பட்ட காலி இடம் மற்றும் பொது சாலை, கிழக்கு - சர்வே எண்.146. இது, கோயமுத்தூர் பதிவு மாவட்டம், சிங்காநல்லூர் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குள் அமைந்துள்ளது. பட்டியல் - C பட்டியல் "B" ல் குறிப்பிட்டுள்ள சொத்தான, ஏக்கர் 2.603 செண்ட்ல் (1,13,363 சதுர மீட்டர்) உள்ள பிரிபடாத பங்கு கொண்ட காலி இடமான 557 ச.அடி அல்லது 51.076 ச.மீட்டர் மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். பட்டியல் - D பட்டியல் "B" சொத்தில் உள்ள சக்தி டவர்ஸ் - என அறியப்படும் காம்ப்ளக்ஸில் உள்ள டவர் 'A' ல் 11 வது தளத்தில் 'B' பட்டியலில் உள்ள அனைத்து பொது பரப்புகளுடன் கூடிய 1195 ச.அடி கட்டிட மேற்பரப்பு கொண்ட ஃப்ளாட் எண்.A-210 என்ற குடியிருப்பு அடுக்கம் மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும்., மற்றும் பொது பரப்பு, பொது வசதிகள், பொது திறந்தவெளி, பொது படிக்கட்டுகள், பொது லிஃப்ட் ஹாலுகள், பொது தண்ணீர் மற்றும் சுகாதார வசதிகள், தனித்தனி மின் இணைப்பு, அடுத்தள உரிமைகள் மற்றும் அவற்றுடனான பொறுத்திகள் ஆகியன. கிழக்கு - ஃப்ளாட் எண்.201 & திறந்தவெளி, மேற்கு - ஃப்ளாட் எண்.209 & செட் பேக், வடக்கு - திறந்தவெளி & செட் பேக், தெற்கு - முகப்பு வழி.	35,00,000/-	ரூ. 3,50,000/-	05.12.2018 காலை 10.00	11.12.2018 மதியம் 02.00 மணி முதல் 04.00 வரை	இல்லை

இப்பவும், ஜாமீன் பெற்றுக்கடனளித்தவரின் (PNBHFL) ன் அதிகாரப்பூர்வ அலுவலர், மேற்சொன்ன சொத்துக்களை விற்க முடிவு செய்துள்ளதால், மேற்கண்ட விபரங்களுடைய சொத்துக்கள் மேற்குறிப்பிட்ட தேதி, நேரம் மற்றும் இடத்தில் விற்பனை செய்யப்படும் என்ற இந்த விற்பனை அறிவிப்பு இன்று பிரசுரிக்கப்படுகிறது. [illegible]

மேற்குறிப்பிட்டுள்ள அசையா அடமானச்சொத்துக்கள் தொடர்பான விபரங்கள் [illegible]

பொது ஏலத்திற்கான விதிகள் & நிபந்தனைகள் :

1. [illegible]
2. சொத்துக்கள் "இருக்கின்ற இடத்தில்" மற்றும் "இருக்கின்ற நிலையில்" [illegible] M/s.Magicbricks Realty Services Limited, [illegible] தொலைபேசி எண். 9212346000. [illegible] www.auctions.magicbricks.com. [illegible]
3. [illegible] M/s. Invent On Solutions Private Limited [illegible]
4. [illegible] "PNB Housing Finance Limited" [illegible] திரு. இக்பால் அலி 9958195453, திரு.சக்திவேல் D [illegible] 9677588968) [illegible] 10 – டிசம்பர் - 2018 மாலை 05.30 மணி [illegible]
5. [illegible]
6. [illegible]
7. எந்த சூழலிலும், சொத்துக்கள் அடிப்படை விலைக்கு குறைவாக விற்கப்படமாட்டாது. ஏல அதிகரிப்பு தொகை ரூ.50,000/- மடங்குக்கு குறைவாக இருக்க கூடாது என இது தெளிவு படுத்துகிறது.
8. [illegible] M/s. Magicbricks Realty Services Limited [illegible]
9. [illegible]
10. [illegible] 25% [illegible]
11. [illegible] 75% [illegible] 2002 ன் விதி 9 ன் கீழ் [illegible]
12. [illegible]
13. [illegible]
14. [illegible]
15. [illegible]
16. [illegible] 2002 ன் படியும் கட்டுப்பட்டது.
17. [illegible]
18. [illegible]
19. [illegible]
20. இந்த பிரசுரமும், நிலுவைகள் முழுமையாக திருப்பிச்செலுத்தப்படவில்லையெனில், மேற்குறிப்பிட்ட தேதியில் விற்பனை நடத்தப்படுவதை அறிவித்து கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு உதவிடும் 15 நாள் அறிவிப்பாகும்.
21. [illegible] www.auctions.magicbricks.com [illegible] Magicbricks Realty Services Limited [illegible] www.pnbhousing.com [illegible]
22. [illegible]
23. சிறப்பு அறிவுரைகள் → [illegible] PNBHFL [illegible]

இடம் : கோயமுத்தூர்
தேதி : 21.11.2018

ஒப்பம்/- அதிகாரப்பூர்வ அலுவலர்
பி என் பி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிட்டெட் - க்காக

சபரிமலையில் பக்தர்களை அனுமதிக்க கூடாது என்பதே கேரள அரசின் நோக்கம்

பொன்.ராதாகிருஷ்ணன் குற்றச்சாட்டு

நிலக்கல், நவ.21: மத்திய அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன், சபரிமலை ஐயப்பன் கோயிலில் புதன்கிழமை வழிபாடு நடத்தினார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பக்தர்களை துன்புறுத்துவதும், அவர்களை சபரிமலைக்கு அனுமதிக்க கூடாது என்பதும்தான் கேரள அரசின் நோக்கமாக இருக்கிறது என்று குற்றம்சாட்டினார்.

முன்னதாக, மத்திய அமைச்சருக்கும், கேரள காவல்துறை உயரதிகாரிகளுக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. அதில், அமைச்சரை அவமதிக்கும் வகையில் பேசியதாக கேரள ஐபிஎஸ் அதிகாரி யதீஷ் சந்திரா மீது மாநில பாஜக பொதுச்செயலாளர் ஏ.என்.ராதாகிருஷ்ணன் புகார் தெரிவித்தார். இதுகுறித்து மத்திய அரசிடம் முறையிட இருப்பதாகவும் அவர் கூறினார்.

சபரிமலைக்கு செல்லும் பக்தர்களின் வாகனங்கள் தற்போது நிலக்கல் வரை மட்டுமே அனுமதிக்கப்படுகின்றன. அங்கிருந்து கேரள அரசுப் பேருந்துகள் மூலமாக பம்பை வரையில் பக்தர்கள் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

இந்நிலையில், மத்திய அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன், சபரிமலையில் வழிபடுவதற்காக புதன்கிழமை நிலக்கல்லுக்கு வந்தார். அப்போது, அங்கு பக்தர்களுக்கு செய்யப்பட்டுள்ள வசதிகள் குறித்து அவர் ஆய்வு செய்தார். பக்தர்களின் வாகனங்கள் பம்பை வரை செல்வதற்கு அனுமதி மறுக்கப்படுவது குறித்து காவல்துறை அதிகாரிகளிடம் அவர் எதிர்ப்பு தெரிவித்தார்.

இதுகுறித்து காவல்துறையிடம் அவர் பேசியபோது, "பக்தர்களை நீங்கள் தேவையின்றி துன்புறுத்துகிறீர்கள். பம்பை வரை கேரள அரசுப் பேருந்து மட்டும் அனுமதிக்கப்படுவது ஏன்? இது ஐயப்ப பக்தர்களுக்கு நல்லதல்ல. தனியார் வாகனங்களும் அனுமதிக்கப்பட வேண்டும்" என்றார்.

அப்போது காவல்துறை ஐபிஎஸ் அதிகாரி யதீஷ் சந்திரா இதுகுறித்து விளக்கம் அளித்தபோது, "பம்பையில் இருந்த வாகன நிறுத்துமிடங்கள் அனைத்தும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதால், அங்கு வாகனங்களை நிறுத்துவதற்கு வழியில்லை. அரசுப் பேருந்துகள் பக்தர்களை இறக்கி விட்டபின், மீண்டும் பக்தர்களை ஏற்றிக்கொண்டு உடனடியாக திரும்பி வந்துவிடும். ஆனால், தனியார் வாகனங்களை அனுமதித்தால் போக்குவரத்து நெரிசல் உருவாகி பக்தர்களுக்கு அசௌகரியம் ஏற்படும்" என்று தெரிவித்தார். அதே சமயம், அமைச்சர் வேண்டுமானால் அவரது அரசு வாகனத்தில் செல்லலாம் என்றார் யதீஷ் சந்திரா.

ஆனால், தனது 6-ஆம் வயதில் இருந்து இதுவரை 30 முறை சபரிமலை வந்திருப்பதாகவும், தற்போது நிலவும் சூழலை வேறு எப்போதும் கண்டதில்லை என்றும் பொன்.ராதாகிருஷ்ணன் தெரிவித்தார். காவல்துறையினரின் கெடுபிடிகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக கேரள அரசுப் பேருந்திலேயே பொன்.ராதாகிருஷ்ணன் புறப்பட்டுச் சென்றார். பின்னர் பம்பையில் இருந்து இருமுடி சுமந்து சென்ற அவர் ஐயப்பன் கோயிலில் சுவாமி தரிசனம் செய்தார்.

இரு வேறு சாலை விபத்துகளில் அணுமின் நிலைய அதிகாரி உள்பட 6 பேர் சாவு

சின்னசேலம் அருகே ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்த தேவநாதன். மனைவி மாலினி, மகள் ரம்யா, கார் ஓட்டுநர் பாபு (எ)பகூல் ரகுமான்.

விழுப்புரம், நவ.21: விழுப்புரம் மாவட்டத்தில் புதன்கிழமை இரு வேறு இடங்களில் நிகழ்ந்த சாலை விபத்துகளில் கல்பாக்க அணுமின் நிலைய அதிகாரி உள்பட 6 பேர் உயிரிழந்தனர்.

காஞ்சிபுரம் மாவட்டம், கல்பாக்கம் நகரியப் பகுதியைச் சேர்ந்தவர் சேஷாத்திரி மகன் தேவநாதன்(58). இவர் கல்பாக்கம் இந்திராகாந்தி அணுமின் ஆராய்ச்சி நிலையத்தில் கதிரியக்கம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் துறையில் அதிகாரியாகப் பணிபுரிந்து வந்தார். இவர், தனது மனைவி மாலினி(48), மகள் ரம்யா(17) ஆகியோருடன் ஈரோட்டில் உள்ள உறவினரைக் காண காரில் புதன்கிழமை காலை புறப்பட்டார். காரை காஞ்சிபுரம் மாவட்டம், புதுப்பட்டினத்தைச் சேர்ந்த பாபு (எ) பகூல் ரகுமான்(34) ஓட்டினார்.

காலை 9.45 மணி அளவில் விழுப்புரம் மாவட்டம், சின்னசேலம் ரயில்வே மேம்பாலப் பகுதியில் சென்றபோது, திடீரென ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த கார் தாறுமாறாக ஓடி மேம்பால தடுப்புக் கட்டை மீது அதிவேகத்தில் மோதியது. இந்த விபத்தில் கார் கடுமையாகச் சேதமடைந்தது. காரில் இருந்த தேவநாதன், மாலினி, ரம்யா, ஓட்டுநர் பகூல் ரகுமான் ஆகிய 4 பேரும் இடிபாட்டில் சிக்கி நிகழ்விடத்திலேயே உயிரிழந்தார்.

உயிரிழந்த மாலினி கல்பாக்கத்தில் உள்ள அணுசக்தித் துறை மத்தியப் பள்ளியில் ஆங்கில ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தார். அவரது மகள் ரம்யா அதே பள்ளியில் 11-ஆம் வகுப்பு படித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தகவலறிந்து சின்னசேலம் போலீஸார் விரைந்து வந்து சடலங்களை மீட்டு கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். கள்ளக்குறிச்சி டி.எஸ்.பி. ராமநாதன், கள்ளக்குறிச்சி காவல் ஆய்வாளர் தங்க. விஜயகுமார் உள்ளிட்டோர் சென்று பார்வையிட்டு விசாரித்தனர். அம்மையகரம் கிராம நிர்வாக அலுவலர் அன்பழகன் கொடுத்த புகாரின் பேரில் சின்னசேலம் போலீஸார் வழக்குப் பதிந்து விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த விபத்தால் அப்பகுதியில் அரை மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

மற்றொரு விபத்தில் இருவர் சாவு: புதுச்சேரி மாநிலம், நோணாங்குப்பத்தைச் சேர்ந்தவர் குணசேகர் மகன் செந்தில்வேலன்(20). இவர், புதுச்சேரியில் உள்ள தனியார் கல்லூரி ஒன்றில் பி.எஸ்சி. முதலாம் ஆண்டு படித்து வந்தார். இவரது நண்பர் அன்பழகன் மகன் சதீஷ்(21), இளநீர் வியாபாரம் செய்து வந்தார். பழைய இரு சக்கர வாகனம் ஒன்று வாங்குவதற்காக, இருவரும் புதுச்சேரியில் இருந்து விழுப்புரம் நோக்கி புதன்கிழமை பிற்பகல் இரு சக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தனர். வாகனத்தை செந்தில்வேலன் ஓட்டினார்.

விழுப்புரம் அருகே வளவனூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி பகுதியில் வந்தபோது செந்தில்வேலன் முன்னால் சென்றுகொண்டிருந்த லாரியை முந்திச் செல்ல முயன்றார். அப்போது, எதிரே விழுப்புரத்திலிருந்து புதுச்சேரி நோக்கி வந்த அரசுப் பேருந்து இவர்கள் வந்த இரு சக்கர வாகனம் மீது மோதியது. இந்த விபத்தில் சதீஷ் நிகழ்விடத்திலேயே உயிரிழந்தார்.

பலத்த காயமடைந்த செந்தில்வேலனை வளவனூர் போலீஸார் மீட்டு, விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். ஆனால், வழியிலேயே அவர் உயிரிழந்தார்.

விபத்து குறித்து போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.